2022 மார்ச் 21] [முனைவர் க. பொன்முடி]

"*2022 ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. அரசினர் தனித் தீர்மானம்

காவேரி நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கிய கர்நாடக அரசுக்குக் கண்டனம், மேகதாதுவிலோ அல்லது காவேரி படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எந்தவித புதிய நீர்த்தேக்கத் திட்டத்தையும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இயக்கத்தின் தலைவரும், தமிழகத்தின் முதல்வருமான தளபதியார் அவர்களுடைய ஆலோசனைப்படியும், அறிவுரைப்படியும் கனத்த இதயத்தோடு, 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று பாரதி பாடியதைப்போல், 'என்று முடியும் இந்த காவேரி போராட்டம்' என்ற நிலையோடு, ஒரு தீர்மானத்தை*

[திரு. துரைமுருகன்] [2022 மார்ச் 21

இந்த மாமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக நான் இங்கே கொண்டு வரவிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போராட்டம் நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது என்று முடியும் என்ற நிலை வரவில்லை. ஒவ்வொரு முறையும் ஒருவிதமான அவதாரத்தை அது எடுக்கிறது. காவேரியில் வருகிற தண்ணீரில் தமிழ்நாட்டிற்கு உரிமை உண்டு என்று 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தமும், அதற்கு முன்னாலே இருக்கின்ற ஒப்பந்தமும் இருந்தாலும், 1974–வுடன் அந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது என்று ஒரு போராட்டத்தை, ஒரு கேள்வியைத் துவக்கியது கர்நாடக அரசு. 'இல்லை' என்று அதற்கான காரண காரியங்களை விளக்கி, நாம் அந்த வாதத்தை முறியடித்தோம். பிறகு, இப்படி தண்ணீர் தருவதிலே பெரிய தகராறு இருக்கிறதே, ஒரு Tribunal–ஐ அமைக்கலாம் என்று கேட்டபோது, அதை அமைக்கக் கூடாது என்று முட்டுக்கட்டை போட்டார்கள். அதையும் முறியடித்து நாம் ஒரு Tribunal–ஐக் கொண்டு வந்தோம். அதிலே ஓர் இடைக்காலத் தீர்ப்பு வேண்டுமென்று கேட்டோம். அதைக் கொடுக்கக் கூடாது என்று, அதற்கு ஒரு முட்டுக்கட்டை போட்டார்கள். அதிலேயும் வாதத்தால் வென்றோம். அந்த இடைக்காலத் தீர்ப்புக்கு ஓர் ஆணையம் அமைக்க வேண்டும் என்றோம். அதுவும் தேவையில்லை என்றார்கள். அதையும் வென்று காட்டினோம். இறுதியிலே ஒரு தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பை Gazette–லே போடமாட்டோம் என்று சொன்னார்கள். போராடி அதையும் Gazette–ல் போட வைத்தோம். இப்படி ஒவ்வொரு முறையும் நிகழ்ந்துகொண்டு வந்தது.

Tribunal–ன் தீர்ப்புக்குப் பிறகு, கடைசியில், Cauvery Water Disputes–க்காக, காவேரி ஆணையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதை அமைக்கமாட்டோம் என்று சொன்னார்கள். அதை அமைத்ததற்குப் பிறகு, அதற்கு ஒரு தலைவரை நியமிக்கமாட்டோம் என்று சொன்னார்கள். அதிலே, வாதாடினோம். இப்படி ஒவ்வொரு முறையும், நாமல்ல, நம்மை வளர்த்த தலைவர்கள், அவர்களெல்லாம், பெரிய பெரியவர்களெல்லாம் இதிலே ஈடுபட்டு, இந்தப் பெரிய காரியத்தைச் செய்திருக்கிறார்கள்.

1968 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அவர் அங்குள்ள முதல்வர் திரு. படேலுடன் பேசினார். அதைத் தொடர்ந்து, பொதுப் பணித் துறை அமைச்சராக

2022 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

இருந்த கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டு போராடினார்கள். அதற்குப் பிறகு வந்த மாண்புமிகு அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தப் போராட்டத்தை தோள்மீது சுமந்தார்கள். அதற்குப் பின்னர் வந்த, நம்முடைய மதிப்பிற்குரிய அம்மையார் செல்வி ஜெயலலிதா அவர்கள் இதை Gazette–லே போடுவதற்காக ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அதற்குப் பிறகு வந்த முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் அவரால் முடிந்த அளவுக்கு கடிதங்களையும் மற்றவற்றையும் எழுதி செயல்பட்டார்கள். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் அந்தப் போராட்டத்தை தோள்மீது தாங்கி நடத்த முன்வந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11–05

எனக்கு இருக்கின்ற எண்ணமெல்லாம், நாமெல்லாம் அண்ணாவோடும் மற்ற தலைவர்களோடும் இருந்தோம். அவர்கள் நம்மை வளர்த்தார்கள். நமக்கு இந்தப் பிரச்சினை தெரியும். எனக்கு இருக்கிற எண்ணம், நம்மையும் மீறிப் போனால் நம்முடைய மகன், பேரன், கொள்ளுப் பேரன் வரைகூட இந்தப் பிரச்சினை போகுமோ என்று நினைக்கிறேன். அதை எதிர்க்கிற சக்தி, அதை எதிர்க்கிற வீரியம் அவர்களுக்கெல்லாம் இருக்குமா என்றுகூட நான் சந்தேகப்படுகிறேன். காரணம், எந்த நிலையிலும் எதிர்ப்பதே என்று இருக்கிறார்கள். கடைசியிலே இதுதான் உங்களுக்கு தண்ணீர், இவ்வளவுதான் தண்ணீர் என்று Supreme Court தீர்ப்பு கொடுத்துவிட்டது. அவ்வளவு தண்ணீர் போகவேண்டும். ஆனால் நாங்கள் அணை கட்டுவோம் என்று அவர்கள் சொல்வது புதியதல்ல. திரு. குண்டுராவ், "நான் யாரையும் கேட்கத் தேவையில்லை; நான் இப்பொழுது அடிக்கல் நாட்டப் போகிறேன்" என்று சொன்னார். "ஜனாதிபதி நீலம் சஞ்ஜீவி ரெட்டியே அந்த விழாவுக்கு வருகிறார்" என்று சொன்னார். திருவாளர்கள் ராமகிருஷ்ண ஹெக்டே, குமரப்பா, குமாரசாமி, எடியூரப்பா, தேவேகவுடா எல்லோரும் ஒரே அணியில் இருக்கிறார்கள். அது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, B.J.P. ஆக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் ஒரே நிலையில் இருக்கிறார்கள். அதிலே மாறுபட்ட கருத்து இல்லை.

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி–எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி?"

என்று கேட்ட பாரதியைப் போல் எங்களுக்குள் ஆயிரம் இருக்கலாம்; ஆனால் காவேரி பிரச்சினையில் நாங்கள் ஓரணி என்ற

[திரு. துரைமுருகன்] [2022 மார்ச் 21

நிலையை கர்நாடகத்தில் அரசியல்வாதிகள் எடுத்திருக்கிறார்கள். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இங்கேகூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் கொண்டுவந்த போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதமான நிபந்தனையுமின்றி ஆதரித்திருக்கிறது. அதேபோல் நாங்கள் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில் அவர்களும் ஆதரித்திருக்கிறார்கள். ஆனால் இந்த மன்றத்திலே ஆதரித்திருக்கிறோம். நான் எல்லோரையும் கைகூப்பி கேட்டுக்கொள்கிறேன். 1988 ஆம் ஆண்டிலிருந்து காவேரி பிரச்சினையோடு இருக்கின்றவன். என்னுடைய காலத்திலேதான் தலைவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். Tribunal கொண்டுவருவதற்கும், இடைக்கால தீர்ப்புக்கும் கடைசிவரை இந்தப் பிரச்சினையோடு இணைந்திருந்தவன். அந்த ஏக்கத்தோடு கேட்கிறேன்; நமக்குள் ஆயிரம் இருக்கலாம். நீங்கள் யோக்கியர்களா, நான் யோக்கியனா என்று சண்டை போடலாம். தயவு செய்து கேட்கிறேன். யாராக இருந்தாலும் நான் உட்பட காவேரி பிரச்சினையில் நீ யோக்கியனா, நான் யோக்கியனா, நீ என்ன செய்தாய், நான் என்ன செய்தேன் என்று பேசுவதை விட்டுவிடவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நானேகூட தவறு செய்திருக்கிறேன். நான் இல்லை என்று சொல்லவில்லை. அது என்னுடைய வாலிப பருவம். இன்றைக்கு நான் ஓரளவுக்கு maturity ஆகியிருக்கலாம்; அல்லது எனக்கேகூட பொறுப்பு வந்திருக்கலாம். ஆனால் எண்ணிப் பார்க்கிறபோது, இரவு எல்லாம் நான் இதைப் படிக்கிறபோது உள்ளபடியே இந்த பிரச்சினையில் கொஞ்சம் ஈடுபட்டவன் என்ற முறையினால் மனம் கனத்துப் போனது. எப்படிப் போய்க்கொண்டிருக்கிறோம், எந்தப் பிரச்சினை போனாலும், கீழே ஒரு அடி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் கிடைக்க வேண்டிய தண்ணீர் குறித்து சட்டப்படி சொல்லிவிட்டார்கள். தமிழ்நாட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று correct ஆக சொல்லிவிட்டார்கள். மேலே காவேரி, கிருஷ்ணராஜசாகர் நிரம்பியவுடன், 52 TMC தண்ணீர் கொடுக்க வேண்டும். அந்த அணை easy ஆக நிரம்பாது. அதற்கு முன்னால் 20 அணைகள் கட்டி வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் நிரம்பி தண்ணீர் கொடுக்க வேண்டும்.

அதேபோல் கபிணி அணை, அவர்கள் இப்பொழுதெல்லாம் நிறைய பயிரிட ஆரம்பித்துவிட்டார்கள். இப்பொழுது 3,000

2022 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

ஏக்கரில் பயிர் வைத்திருக்கிறார்கள். அதெல்லாம் போக மிச்சம் 60 TMC தண்ணீர் கொடுக்க வேண்டும். ஆக 52 + 60 TMC = 112 TMC தண்ணீர். இந்த 112 TMC தண்ணீரில் 14.7 TMC தண்ணீரை கர்நாடகம் எடுத்துக்கொண்டது. ஆக 97.25 TMC தண்ணீர்தான் மீதம் இருக்கிறது. ஆனால் நமக்கு 177.25 TMC தண்ணீர் சட்டப்படி கொடுக்க வேண்டும். ஆகையினால் மிச்சம் 80 TMC தண்ணீர் சட்டப்படி கொடுக்க வேண்டும். இந்த 80 TMC தண்ணீருக்கு என்ன சொல்கிறார்கள் என்று கேட்டால், கிருஷ்ணராஜசாகர் அணைக்குக் கீழே, கபிணி அணைக்குக் கீழே, மேகதாது அணை, பிலிகுண்டுக்கு நான்கு கிலோ மீட்டருக்கு மேலே கட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். இதுவரையில் பொழிகிற மழை இருக்கிறதே, அது uncontrolled catchment. யாராலும் தடுத்து நிறுத்த முடியாத மழை.

முற்பகல் 11–10

அது தமிழ்நாட்டுக்குத்தான் உண்டு என்று உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்டது. அப்படியானால், 97.25 T.M.C. + 80 T.M.C. என ஆக மொத்தம் 177.25 T.M.C. தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டும். ஆனால், நமக்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில், நமக்கு என்று இயற்கையாகக் கிடைக்கும் தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் சொன்னதற்குப் பிறகும், அந்த இடத்திற்கு நடுவிலே நான் அணை கட்டுவேன் என்று சொல்வது எவ்வளவு பெரிய அடாவடித்தனம். இது தேவை என்பது அல்ல; தமிழ்நாட்டிற்கு ஏன் இந்த நிலைமை? வருத்தம்தான்.

"காவிரி தென்பெண்ணை பாலாறு–தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி–என
மேவிய யாறு பலவோடத்–திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

என்று பாடினான் பாரதி.

கன்னியாகுமரிக்குச் சென்றால் தாமிரபரணி ஆறு ஓடுகிறது; திருநெல்வேலிக்குச் சென்றால் தாமிரபரணி ஆறு ஓடுகிறது; கொஞ்சம் பக்கத்தில் விருதுநகருக்கு வந்தால் வைப்பாறு ஓடுகிறது; மதுரைக்கு வந்தால் வைகை ஆறு ஓடுகிறது; திருச்சிக்கு வந்தால் காவேரி ஆறு ஓடுகிறது. விழுப்புரத்திற்கு வந்தால் தென்பெண்ணை ஆறு ஓடுகிறது; எங்கள் ஊர் வேலூருக்கு வந்தால் பாலாறு ஓடுகிறது; இந்தப் பக்கம் போனால் கொசஸ்தலை ஆறு

[திரு. துரைமுருகன்] [2022 மார்ச் 21

ஓடுகிறது, ஆரணி ஆறு ஓடுகிறது. இப்படி இத்தனை ஆறுகள் ஓடினாலும், நாம் தண்ணீருக்குக் கையேந்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஒரு பக்கத்தில் கேரள மாநிலத்தோடு போராட்டம்; இன்னொரு பக்கத்தில் கர்நாடக மாநிலத்தோடு போராட்டம். ஆந்திர மாநிலம்தான் போராட்டத்திலிருந்து கொஞ்சம் தணிந்து நம்மோடு இசைந்து நாம் கேட்கின்ற நேரங்களில் கொஞ்சம் தண்ணீர் கொடுக்கிறது. ஆக, நாம் தண்ணீர் பெறுவதற்கே ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆயிரக்கணக்கான ஆறுகள் இங்கே ஓடிக் கொண்டிருக்கின்றன.

உச்ச நீதிமன்றம் சொன்னதையே நான் மதிக்கமாட்டேன் என்று ஒரு மாநில அரசு சொன்னால், where is federalism? எங்கே இருக்கிறது கூட்டாட்சித் தத்துவம்? (மேசையைத் தட்டும் ஒலி) எங்கே இருக்கிறது சுதந்திர நாடு? (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றத்திற்கு மேலே ஒன்று உண்டா? ஒரு தனி மனிதன் உச்ச நீதிமன்றத்தின் ஆணையை மதிக்க மாட்டேன் என்று சொன்னால், சட்டம் சும்மாவிடுமா? அதை ஒரு மாநிலமே சொல்கிறது என்றால், ஏன் என்று கேட்க வேண்டாமா? இவர்கள் மட்டுமல்ல, இவர்களைப் போன்றுதான் கேரளா மாநிலமும் நடந்துகொள்கிறதே!

ஆகையினால், நம்மைப் பொறுத்தவரையில், நாம் போராட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இதிலே நாம் தோற்றுப்போனால் வருங்கால சமுதாயம் நம்மை பழிக்கும், சபிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த period, நமக்குச் சரியான period. ஆகையினால், நம் உரிமையை நாம் எப்படியும் பெற்றாக வேண்டும் என்று சொல்கிறேன். அதற்காக படை எடுக்க முடியாது. நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள் என்று கேட்கலாம். ஒன்றும் செய்ய முடியாது. கடிதம் எழுதலாம். கலைஞர் அவர்கள் கடிதம் எழுதினார்கள்; எம்.ஜி.ஆர். அவர்கள் கடிதம் எழுதினார்கள்; செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடிதம் எழுதினார்கள்; முன்னாள் முதல்வர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். தற்போது, நம்முடைய முதல்வர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். போய்ப் பார்ப்பார்கள். பார்க்கவில்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் செல்லுங்கள், நாங்கள் உடனே தண்ணீர் விடுகிறோம் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய இசைவு இல்லாமல் ஓர் அணையைக் கட்ட முடியாது. DPR தயாரித்துக் கொடுக்கிறார்கள். அதை Central Water Commission வாங்குகிறது. ஆக, மத்திய சர்க்காரும் சேர்ந்து, மத்தியில் எந்தக் கட்சி ஆட்சியில்

2022 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

இருந்தாலும் சரி, அது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, அது கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் சரி, இப்போதிருக்கிற ஆட்சியாக இருந்தாலும் சரி, அக்கட்சி தமிழ்நாட்டுடன் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்தான் நடந்து கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால், இந்தத் திட்டத்தை எதிர்த்து எப்படிப் போராடுவது? சட்டப்படிதான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம், நாம் உடனே ஒரு பெரிய போராட்டத்தைத் துவங்கிவிட இயலாது, அது நம்முடைய அண்டை மாநிலம்.

எனக்கு ஒரேயொரு நப்பாசை மட்டும் இருக்கிறது. இதுகுறித்து நான் கிட்டத்தட்ட 10, 15 மாநில முதல்வர்களுடன் பேசியிருக்கிறேன். முன்னாள் முதல்வர் திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்கள் நியாயமானவர்; அந்தப் பக்கத்தில் இருந்து தமிழ்நாட்டின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர். கர்நாடகத்தில் இப்போது முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. பசவராஜ் பொம்மை அவர்கள், கொஞ்சம் வேகமாகப் பேசினாலும், அவருடைய தந்தையார் திரு. எஸ்.ஆர். பொம்மை அவர்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றிய ஒரு பெருமகனார். காரணம், மத்திய அரசு நினைத்தால், எந்த ஆட்சியையும், உடனே அன்றைய இரவே கலைக்க முடியும் என்ற அந்த காட்டுத்தர்பாருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்த பெருமகனார் திரு. எஸ்.ஆர். பொம்மை அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய திருமகன் தற்போதுள்ள முதலமைச்சர், ஜனநாயகத்தை மதிப்பார் என்று கருதுகிறேன். எங்கள் தலைவர் கலைஞர் அவர்களிடத்தில், அவருடைய தந்தைக்கு அபரிமிதமான மரியாதை உண்டு. தலைவருடைய பதவிப் பிரமாணத்திற்கு அவரை அழைத்தார்கள். எனவே, இன்றைக்கும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மாண்புமிகு திரு. பசவராஜ் பொம்மை அவர்கள், அவருடைய தந்தை வழியிலே நின்று நியாயத்தைத் தருவார் என்று நம்புகிறேன். காரணம், கர்நாடக மாநிலம் நமக்கு அண்டையில் இருக்கிற ஒரு மாநிலம். ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், நாமும், அவர்களும் ஒன்றாகப் போக வேண்டும். இப்போது மக்கள் அவதிப்படுகிறார்கள். அன்று நடத்திய போராட்டங்களால், எத்தனை குடும்பங்கள் அழிந்தன. எத்தனை பேர் கர்நாடகத்திலிருந்து சொத்துகளை விட்டுவிட்டு வந்தார்கள். எத்தனை பேருக்கு அந்த நிலைமை ஏற்பட்டது. அதே நிலை தமிழ்நாட்டில் வேண்டாம் என்று அன்றைக்கு அதைத் தடுத்து நிறுத்தினோம். ஆகையினால், அண்டை மாநிலங்களோடு நல்லுறவையும் இந்த அரசு பேணும். அதே நேரத்தில் நம் உரிமையை விட்டுக்கொடுக்கக் கூடாது. இந்த அரசும், இந்த மன்றத்தில் இருக்கிற

[திரு. துரைமுருகன்] [2022 மார்ச் 21

நாம் அத்தனை பேரும், இந்த நாட்டைக் காக்கின்ற தளபதிகளாக இருக்கக்கூடியவர்கள். எனவே, நான் கனத்த இதயத்தோடு ஒரு தீர்மானத்தை உங்கள் முன்னால் படிக்கப் போகிறேன். இதற்கு யோசனையைத் தாருங்கள். நானா, நீயா என்ற பேச்சு இருக்கக் கூடாது. அதுவே பெரிய தவறு. அதற்குமேல் நான் அதிலே பேச விரும்பவில்லை. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்ற முறையில் நான் இந்தத் தீர்மானத்தை உங்கள் முன் படிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

கீழ்க்காணும் தீர்மானத்திற்கு உங்களுடைய ஆதரவு வேண்டுமென்றும், ஒருமித்த கருத்தோடு அதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளோடும் இந்தத் தீர்மானத்தைப் படிக்கிறேன்.

தீர்மானம்

"காவிரி நடுவர் மன்றம் 5–2–2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், மாண்பமை உச்ச நீதிமன்றம் 16–2–2018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் இசைவினைப் பெறாமலும், ஒன்றிய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட நிதி ஒதுக்குவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால் கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் கண்டனத்தை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கர்நாடகாவின் மேகதாது அணைத் திட்டத்திற்கு எந்தவிதமான தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உட்பட எவ்விதமான அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசை வலியுறுத்த இம்மாமன்றம் கேட்டுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி நதிநீர்ப் பிரச்சினை ஒரு நீண்ட காலப் பிரச்சினையாகும். இதற்குத் தீர்வாக உச்ச நீதிமன்றம் 16–2–2018 அன்று வழங்கிய தீர்ப்பு செயலாக்கப்பட்டு வருகிறது. இப்பிரச்சினை இரு மாநிலங்களின் உணர்வுபூர்வமான பிரச்சினையாகும். ஆதலால்,

2022 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

கர்நாடக அரசு மேகதாதுவிலோ அல்லது காவிரிப்படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எந்தவித புதிய நீர்த்தேக்கத் திட்டத்தையும், மற்ற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், ஒன்றிய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடக அரசிற்கு அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசை இம்மாமன்றம் கேட்டுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் 18–5–2018 ஆணையின்படி, அதன் 16–2–2018 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பினைச் செயல்படுத்த, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்படாத அணையை மேகதாதுவில் கட்ட கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதற்கு அனுமதி அளிக்கவோ கூடாது என்று ஆணையத்தை இம்மாமன்றம் கேட்டுக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது முழுமையான ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை மாண்புமிகு உறுப்பினர்கள் முழு மனதோடு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தமிழ்நாட்டின் உயிர் நாடியான காவேரி பிரச்சினை பற்றி மிகத் தெளிவாக, அற்புதமாக நாம் கடந்து வந்த பாதைகளையெல்லாம் மறந்துவிட்டு, இனி என்ன செய்ய வேண்டுமென்பதை ஓர் அணியில் நாம் நிற்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், இங்கே முன் வரிசையில் இருக்கின்ற தலைவர்கள் தங்களுடைய கருத்துகளை விவாதப் பொருளாக இல்லாமல், ஆதரவு தெரிவித்து, சுருக்கமாகப் பேசும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். காரணம், இன்னும் இரண்டு நிதிநிலை அறிக்கைகளின்மீது விவாதங்கள் நடைபெறவிருப்பதால் பேசவிருக்கின்றவர்கள்

[பேரவைத் தலைவர்] [2022 மார்ச் 21

தயவுசெய்து சுருக்கமாக தங்களுடைய கருத்துகளை எடுத்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை ஆதரித்து புரட்சி பாரதம் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தை இங்கே பதிவு செய்கிறேன். கர்நாடக அரசுக்கு எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், காவேரி நடுவர் மன்றம் அளித்த இறுதித் தீர்ப்பையும் மதிக்காமல், மத்திய அரசின் அனுமதியையும் பெறாமல் தன்னிச்சையாக நிதி ஒதுக்கி மேகதாதுவில் அணையைக் கட்டியே தீருவோம் என்று கர்வத்துடன் கொக்கரிக்கும் கர்நாடக அரசின் செயலுக்கு கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவேரி நதி நீர்ப் பிரச்சினையில் நீண்ட காலமாகப் போராடி, உச்ச நீதிமன்றம் 16–2–2018 அன்று தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பு செயலாக்கப்பட்டு வருகிறது. ஆகவே, கர்நாடக அரசு, காவேரி படுகையில் எந்த இடத்திலும் அணை அல்லது புதிய நீர்த்தேக்கத் திட்டத்தை படுகை மாநிலங்களின் இசைவு இல்லாமலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் கட்டக் கூடாது என்று கர்நாடக அரசுக்கு மத்திய அரசு அறிவுறுத்த வேண்டுமென்றும் காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தை இந்தத் தீர்மானம் மூலமாக கேட்டுக்கொள்ள வேண்டும். மேலும், மேகதாதுவில் அணை கட்டுவதைத் தடுக்கவும், நம் உரிமையை நிலைநாட்டவும், டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கவும் தமிழக அரசு எடுக்கின்ற அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும் புரட்சி பாரதம் வரவேற்கிறது. இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு தொடர்ந்து தமிழ் மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளில், விவசாயிகளின் பிரச்சினைகளில் அடாவடித்தனம் செய்து வருவதை நாம் அறிவோம். குறிப்பாக, தற்போது மேகதாது அருகே தடுப்பணை கட்டுவோம் என்றும், அந்த அரசு அதற்காக ஆயிரம் கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறது என்றும், இதை யாராலும் தடுக்க முடியாது,

2022 மார்ச் 21] [திரு. தி. வேல்முருகன்]

நாங்கள் அணையைக் கட்டியே தீருவோம் என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

குறிப்பாக, காவேரி உரிமை என்பது ஒரு காலகட்டத்தில் 350 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு வந்திருக்கிறது. அதற்குப் பிறகு 253 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு கிடைத்திருக்கிறது. ஆனால், இன்றைக்கு வெறும் 177 டி.எம்.சி. தண்ணீர்தான் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் என்று கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய உரிமைகளை அவர்கள் பறித்திருக்கிறார்கள். குறிப்பாக, டெல்டா மாவட்டம் இதனூடாக மிகப் பெரிய பாதிப்பைச் சந்தித்திருக்கிறது. 20 மாவட்டங்களின் குடிநீர் ஆதாரம் மிகப் பெரிய கேள்விக்குறியாக தொக்கி நிற்கிறது. ஒன்றிய அரசு, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் அமைத்தும், நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பை அளித்தும் அவர்கள் கிஞ்சித்தும் கவலை கொள்வதில்லை. தொடர்ச்சியாக காவேரிப் பிரச்சினை வருகின்றபோதெல்லாம் அங்கு வாழ்கின்ற தமிழ் மக்களுடைய உயிருக்கும், உடைமைகளுக்கும் உத்தரவாதம் இல்லாத ஒரு சூழ்நிலை. லாரி ஓட்டுநர்கள் அரை நிர்வாணப்படுத்தப்பட்டு தாக்கப்பட்டதும், கல்லூரிகளில் படிக்கச் சென்ற மாணவச் செல்வங்கள் அங்கு அடித்து தோப்புக்கரணம் போட வைக்கப்பட்டதும், கலவரங்கள் ஏற்பட்டபோது தமிழர்கள் வெட்டி ஆற்றிலே வீசப்பட்டதும், அவர்களுடைய உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டதும் நாம் அறிவோம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புகூட தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் உழைத்து முன்னேறி சம்பாதித்த பல ஆம்னி பேருந்துகள் தீயிட்டு எரிக்கப்பட்டன. அந்த மாநில அரசின் காவல் துறையினரின் கைகள் கட்டப்பட்டு, அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். தொடர்ச்சியாக இதுபோன்ற அநியாய, அக்கிரமங்களை, அட்டூழியங்களைச் செய்து வருகின்ற கர்நாடக அரசைக் கண்டிக்கின்ற அதேவேளையில், தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளும், விவசாய அமைப்புகளும், தமிழர்களும் நாம் ஓர் அணியில் இருக்கிறோம் என்கின்ற அந்த நிலைப்பாட்டை எடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கிறேன். அதேநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் ஒன்றிய தலைமை அமைச்சரைச் சந்திக்கின்ற வாய்ப்பு

[திரு. தி. வேல்முருகன்] [2022 மார்ச் 21

கிடைக்கின்றபோதும் அல்லது கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் அவர்களை, நீர்பாசனத் துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு கிடைக்கின்றபோதும், இனி தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு சிறு கீரலும் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற உத்தரவாதத்தை நாம் கேட்டு பெற வேண்டியிருக்கிறது.

முற்பகல் 11–25

தொடர்ச்சியாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மிகப் பெரிய அவதிக்குள்ளாவதும், உடைமைகளை விட்டு அகதிகளைப்போல் ஓசூரை நோக்கி அவர்கள் நடந்துவருகின்ற அவலத்தையெல்லாம் நாம் சந்தித்திருக்கிறோம். அந்தவகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாகக் கொண்டுவந்திருக்கின்ற, காவேரி உரிமையைப் பாதுகாப்பதற்கு, மேகதாது அருகே தடுப்பணை கட்டுவதைத் தடுப்பதற்கு இந்த அவை ஏகமனதாக எடுக்கின்ற முடிவை, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக ஆதரித்து, பாராட்டி வரவேற்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

***திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதிநீர் விஷயத்தில், ஒன்றிய அரசைப் பொறுத்தவரை, 'பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுகின்ற' வேலையை வருடக் கணக்கில் அவர்கள் செய்துகொண்டே இருக்கின்றார்கள். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இது நீருக்கான சுதந்திரப் போராட்டம் என்பதை அழுத்தமாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார். இந்த விடுதலைப் போராட்டத்தை இப்போது முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஆட்சி நடக்கின்ற இந்தக் காலத்திலே, இது முடிவுக்கு வரவில்லை என்று சொன்னால், கண்டிப்பாக, நம் கொள்ளுப்பேரன் காலத்திலும் இந்தப் போராட்டம் தொடர்வதற்குத்தான் வாய்ப்பிருக்கிறது. ஆக, எப்பாடுபட்டாலும், எந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டாவது இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். காவேரி

2022 மார்ச் 21] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

நதிநீரிலே, ஒரு சொட்டு தண்ணீரைக்கூட அவர்கள் தடுத்து நிறுத்திவிடக் கூடாது. அந்தவகையில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் எடுக்கின்ற எந்த முடிவாக இருந்தாலும், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆதரிக்கிறது; உடன் நிற்கிறது. இந்தத் தீர்மானத்தை முழுமையாக, மனதார, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி போராட்ட குணத்தோடு வரவேற்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக அரசு, காவேரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்ட தன்னிச்சையாக நிதி ஒதுக்கியுள்ளதைக் கண்டித்தும், இரு மாநில மக்களின் உணர்வுபூர்வமான இந்தப் பிரச்சினையில், இந்தத் திட்டத்திற்கு ஒன்றிய அரசு எந்தவிதமான தொழில்நுட்ப அனுமதியோ, சுற்றுச்சூழல் அனுமதியோ வழங்கக்கூடாது என்று வலியுறுத்தியும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் முழு மனதோடு வரவேற்கிறோம். நம்முடைய தமிழ் மண்ணில் மக்கள் இழந்துவிட்ட உரிமைகளை மீட்டெடுப்பதற்காகவும், இருக்கின்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த 'திராவிட மாடல்' ஆட்சியின் தலைவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னெடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் மனிதநேய மக்கள் கட்சி ஆதரவு தரும் என்பதைத் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை வரவேற்று, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம். பூமி தன் போக்கில் சுழன்று கொண்டிருக்கின்றது; காற்று வீசிக் கொண்டிருக்கின்றது; நதிகள் தன் போக்கில் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை. ஆகவே, தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்ற காவேரி நீரைத் தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லையென்ற நிலையை

[டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்][2022 மார்ச் 21

நாம் ஏற்படுத்த வேண்டும். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வாயிலாக, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிப்பதோடு, பாராட்டுகிறது. இதற்கான போராட்டத்திற்கு என்றும் துணை நிற்கும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி ஆறு என்பது, தமிழர்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கிறது. காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்காக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கர்நாடக அரசு முதற்கட்டமாக ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. அவ்வாறு காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டப்பட்டால், தமிழகத்தினுடைய பாசன வசதி மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் கேள்விக்குறியாகி விடும்.

முற்பகல் 11–30

டெல்டா மாவட்டங்களும், ஒட்டுமொத்த தமிழ்நாடும் பாலைவனமாக மாறிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும், காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பையும் மதிக்காமல், 'ஒன்றிய அரசின் எந்தவித அனுமதியும் தேவையில்லை, அணை கட்டியே தீருவோம்' என்று கர்நாடக முதலமைச்சர் திரு. பசவராஜ் பொம்மை அவர்கள் ஆணவத்தோடு பேசி வருகிறார். இது இரண்டு மாநில உறவுகளை பிளவுபடுத்துகிறது; அவருடைய பேச்சு இரண்டு மாநில மக்களின் மோதலுக்கு வழிவகுப்பதாக இருக்கிறது. அதேபோல, இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு நேர் எதிரானது. இரு மாநிலங்களுக்கிடையே நதிநீர் பங்கீட்டிலே பிரச்சினை வரும்போது, நடுநிலையோடு, சார்பினை இல்லாமல் தீர்க்க வேண்டிய ஒன்றிய அரசு, இன்றைக்கு கர்நாடக அரசுக்கு ஆதரவாக இருப்பது தமிழக மக்களுக்கு இழைக்கின்ற மாபெரும் துரோகம் ஆகும். ஆகவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டுவதற்கு ஒன்றிய அரசு வரைபட அனுமதியோ, எந்தவிதமான சுற்றுச்சூழல் அனுமதியோ வழங்கக் கூடாது என்று கொண்டு வந்திருக்கின்ற

2022 மார்ச் 21] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

அரசினர் தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டி, இதைப் பற்றி விவாதித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதுணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

***திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர் மன்றம் அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் மதிக்காமலும், நமது மாநிலத்தின் கருத்தைக் கேட்காமலும், ஒன்றிய அரசின் அனுமதியைப் பெறாமலும், அதிகாரத்தை தானே கையில் எடுத்துக்கொண்டு, காவேரி நதியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்ட முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது; ஏற்றுக்கொள்ள இயலாது. காவேரி நதி நீர்ப் பிரச்சினை என்பது ஒரு நீண்ட காலப் பிரச்சினையாகும். இதற்கான தீர்வாக, உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இரு மாநிலங்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சினை என்பதை கர்நாடக அரசு உணராமல், மேகதாதுவில் அணை கட்ட முயற்சிப்பதை ஒன்றிய அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இதுகுறித்து நமது மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் உணர்வுப்பூர்வமாகக் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் ஆதரிக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்து எடுக்கிற அனைத்து நடவடிக்கைகளுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கரம் கோர்க்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

***திரு. ம. சிந்தனை செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனத்த இதயத்தோடு, தொலைநோக்குப் பார்வையோடு, கர்நாடக அரசு மேகதாதுவின் குறுக்கே அணை கட்ட முயற்சிக்கிற நடவடிக்கைகளைத் திரும்பப் பெற வேண்டும்;

[திரு. ம. சிந்தனை செல்வன்] [*2022 மார்ச் 21*

ஒன்றிய அரசு மௌனம் கலைக்க வேண்டும்; காவேரி நீர் மேலாண்மை ஆணையம் கர்நாடக அரசுக்கு காலதாமதமின்றி உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்த மகத்தான, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்மானத்தை, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே உளமார வரவேற்கிறோம். இந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே, தமிழகத்திற்கு மாத்திரமல்ல, இந்தியாவிற்கே தனது அணுகுமுறைகளின் மூலமாகவும், அறிவாளுமையின் மூலமாகவும் எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனைத்துவிதமான நடவடிக்கைகளுக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சி துணையாக நிற்கும் என்பதை இந்தத் தருணத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஔவை திருமகள் 'வரப்புயர நீர் உயரும்' என்று பாடினாள். இன்று ஒருவேளை அவள் இருந்திருந்தால், அந்த அறிவுத் திருமகள் வேளாண்மையின் நீர் பரப்பையும் உயர்த்துவதற்கான அறிவாளுமை மிகுந்த மகத்தான திட்டத்தை தமிழக அரசு தந்திருக்கிறது என்பதை உணர்ந்து, 'வரப்பும் உயர வேண்டும்; வரப்புக்கு உள்ளடங்கியிருக்கிற பரப்பும் உயர வேண்டும்' என்று பாடியிருப்பாள். ஆகவே, நம்முடைய வேளாண்மை என்பது, தற்சார்பான வேளாண்மையாக, இந்திய அரசின் கவனத்தை ஈர்க்கிற, இந்திய விவசாயிகளின் கவனத்தை ஈர்க்கிற, வேளாண்மையாக இருக்கிறது. தமிழகத்தின் வேளாண்மை சார்ந்த மக்களின் நலன்களில் மாத்திரமல்ல; கர்நாடகத்து விவசாயிகளின் மீதும் நமக்குக் கனிவு இருக்கிறது; அக்கறை இருக்கிறது. கர்நாடகத்து மக்கள்மீது நமக்கு அன்பிருக்கிறது; பாசம் இருக்கிறது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களது கனிந்த, அந்த முதிர்ந்த உரை வெளிப்படுத்துகிறது. ஆகவே, பெங்களூருவின் குடிநீர் தேவைக்காக என்று ஒரு மலிவான உத்தியை முன்வைத்து, கர்நாடக அரசு முன்னெடுக்கின்ற இந்த முயற்சி, தமிழகத்திற்கு எதிரானது மாத்திரமல்ல; அரசியல் சாசனத்திற்கும், அரசியல் சாசனம் உறுதிப்படுத்தியிருக்கின்ற கூட்டாட்சித் தத்துவத்திற்கும் எதிரானது.

முற்பகல் 11–35

ஆகவே, கர்நாடகத்து மக்களுக்கு இதை முழுமையாக விளக்கக்கூடியவகையிலே, 50 ஆண்டுகளுக்கும் மேலான

2022 மார்ச் 21] [திரு. ம. சிந்தனை செல்வன்]

அறிவாளுமை மிகுந்த நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், கர்நாடகத்து அரசு, ஒருவேளை தனது அரசியல் நலன்களுக்காக, இந்த முயற்சிகளை மேற்கொண்டாலும், எங்களுக்குத் தந்ததுபோல கர்நாடகத்து மக்களுக்கு ஒரு தெளிவான விளக்கத்தினைத் தரக்கூடிய வகையிலே, தன்னுடைய முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு, தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் முன்னெடுக்கிற அனைத்து முன்முயற்சிகளுக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சி துணையாக இருக்கும் என இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

***திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5–2–2007 ஆம் ஆண்டு காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மதிக்காமலும், 16–2–2018 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மதிக்காமலும், கர்நாடக அரசு காவேரியின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணை கட்ட நிதி ஒதுக்கியதை எதிர்த்து, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அரசினர் தனித் தீர்மானத்தை பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக ஆதரிக்கிறோம். மேலும், அவரின் தீர்மானத்தை முழு மனதாக ஆதரிப்பதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) பாரதிய ஜனதா கட்சி தனிப்பட்ட முறையிலும் மத்திய அரசை நிச்சயமாக வலியுறுத்தும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர் நலன் காப்பதற்காக, காவேரி நதி நீர் பெறுவதற்காக தமிழக அரசு எடுத்து வருகின்ற எல்லா முயற்சிகளுக்கும் தமிழக பாரதிய ஜனதா கட்சி சார்பாக முழு ஆதரவை தெரிவிக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீரின்றி அமையாது உலகு", "காவேரி இன்றி இயங்காது தமிழகம்", "வான்பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலைய கடற் காவேரி" என்று பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் சங்க இலக்கியங்கள் காவேரியைப் பற்றி குறிப்பிட்டதிலிருந்து

[திரு. ஜி.கே. மணி] [2022 மார்ச் 21

தமிழ்நாட்டின் உரிமை அன்று முதல் இன்றும் எப்படியெல்லாம் இருக்கிறது என்பதையும், கடந்த கால வரலாற்றில் தமிழகத்தில் ஆண்ட கட்சிகள், ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற கட்சிகள் தமிழ்நாட்டின் உரிமையைக் காப்பதற்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என்பதையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எண்ணிப் பார்த்து, "காலம் கருதி இடத்தாற் செயின்" என்ற வள்ளுவரின் கூற்றுக்கு ஏற்ப, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, வழிகாட்டுதலின்படி, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முழு மனதோடு வரவேற்கின்றோம்; ஆதரிக்கின்றோம்; எல்லா நிலைகளிலும் துணை நிற்போம் என்ற வாக்குறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்நாடக மாநில அரசு காவேரியில் அணையைக் கட்டியே தீருவோம், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தமிழ்நாட்டிற்கு விடக் கூடாது என்பதில் தொடர்ந்து அடம் பிடித்து, பிடிவாதம் செய்து வருகின்ற நிலையை நாம் பார்க்கின்றோம்.

குறிப்பாக, 2007 பிப்ரவரி 5 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு. அதற்குப் பிறகு 2018 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, இவற்றையெல்லாம் மதிக்காமல் கர்நாடக அரசு தொடர்ந்து அடம் பிடிக்கிறது. வருகின்ற 2023 ஆம் ஆண்டு கர்நாடகத்தில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலுக்கு முன்பு எப்படியாவது மேகதாதுவில் அணையைக் கட்டியே தீரவேண்டுமென்று கர்நாடக மாநில அரசு உறுதியாக இருக்கிறது. இந்தத் தேர்தலை மனதிலே வைத்துத்தான் அங்கேயிருக்கின்ற அரசியல் கட்சிகள், பாதயாத்திரை செல்வது, அதையும் கடந்து, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற கட்சி இப்போது சட்டமன்றத்தில் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில், மேகதாதுவில் அணை கட்ட 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதாகவும் அறிவித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், நடுநிலையோடு இருக்கின்ற மத்திய அரசின், குறிப்பாக உறுதியாக இருக்கின்ற மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களின் நடவடிக்கை என்பது நமக்கு சந்தேகத்தை கிளப்பியிருக்கிறது. இதற்கு முன்பும் இதேபோன்ற சூழ்நிலை ஏற்பட்ட நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி,

2022 மார்ச் 21] [திரு. ஜி.கே. மணி]

நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தோம். அவர்களோடு நாங்களும் சென்றிருந்தோம். சந்தித்த நேரத்தில், தமிழ்நாட்டின் அனுமதியில்லாமல், கர்நாடக மாநில அரசு மேகதாதுவில் அணை கட்ட முடியாது, அனுமதிக்க மாட்டோம் என்று நம்முடைய குழுவிற்கு அப்போது அவர்கள் உறுதியளித்தார்கள்; நமக்கு நம்பிக்கையும் ஏற்பட்டது.

முற்பகல் 11–40

அதற்குப் பிறகு, இப்பொழுது அதே மாண்புமிகு திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் பெங்களூருவிற்குச் சென்று, கர்நாடக முதலமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு பேசுகிறார். 'தமிழக அரசும், கர்நாடக அரசும் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினால் நல்ல தீர்வு கிட்டும்' என்று சொல்கிறார். அவர் சொல்லியிருக்கிற வார்த்தை, "The project will see the light of the day." உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்துங்கள்; நல்ல தீர்வு, வெளிச்சம் கிடைக்கும் என்று சொல்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? மாண்புமிகு திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் அவர்கள் மறைமுகமாக கர்நாடக மாநில அரசிற்கு துணை போய்விடுவாரோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறது.

இந்தச் சூழ்நிலையிலேதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளும் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் துணையாக இருக்க வேண்டும். இதற்கு முன்பு 2015 ஆம் ஆண்டு அன்றைய மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சராக இருந்த சகோதரி செல்வி உமா பாரதி அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்கள் இளைஞரணித் தலைவர் அன்று அமைச்சராக இருந்தநேரத்தில் மருத்துவர் அன்புமணி அவர்களுக்கும் கடிதம் எழுதியிருந்தார்கள். 'தமிழக அரசின் அனுமதியில்லாமல் அங்கே அணை கட்ட முடியாது; அவர்கள் ஏதாவது அனுமதி கேட்டு வந்தாலும்கூட அதை நாங்கள் திருப்பி அனுப்புவோம்' என்று சொன்னார்கள்.

இப்படி மத்திய அரசு நம்மிடம் ஒரு நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டாலும்கூட, கர்நாடகத்தில் ஏதோ ஒரு நடவடிக்கை என்பது, அணை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டக்கூடும் என்று எச்சரிக்கை மணி அடிக்கிறது. இது மிகப் பெரிய சந்தேகத்தை

[திரு. ஜி.கே. மணி] [2022 மார்ச் 21

கிளப்பியிருக்கிற காரணத்தினாலே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இது ஏதோ கடந்து வந்த காலம் என்று நினைக்காமல், அடிக்கல் நாட்டிவிடக் கூடாது என்பதை மனதிலே கொண்டு, உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினால்தான் சரியாக இருக்கும். அக்கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்திக்கலாம். இதை ஒரு நல்ல வாய்ப்பாக நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற அன்பான வேண்டுகோளையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முன்வைக்க விரும்புகிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், கர்நாடகத்தில் ஏற்கெனவே இருந்த பாசனப் பரப்பைவிட. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதைப்பற்றி நிறைய விவாதித்து இருக்கிறோம்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மணி அடித்ததற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இந்த அவையில் முன்மொழிந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அரசினர் தனித் தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கம் வழிமொழிகிறது; காங்கிரஸ் பேரியக்கம் இதை ஆதரிக்கிறது; வரவேற்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 130 ஆண்டுகள் நீண்ட நெடிய போராட்டம் நடந்திருக்கிறது. இந்த காவேரி மேகதாது பிரச்சினையில் பிரிட்டிஷ் ஆங்கில அரசில், மைசூர் சமஸ்தானத்திற்கும், நம்முடைய சென்னை மாகாணத்திற்கும் இடையே 130 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்ட ஒப்பந்தம். ஆங்கிலேய நீதிமன்றத்தில் தமிழகத்தின் சென்னை மாகாணத்தின் அனுமதி இல்லாமல் அங்கே அணை கட்டக் கூடாது என்று 130 ஆண்டுகளுக்கு முன்பே போடப்பட்ட ஒப்பந்தம் இருக்கிறது. தொடர்ந்து மைசூர் சமஸ்தானம் சென்னை மாகாணத்தினுடைய அனுமதி பெறாமல் எதுவும் செய்யக் கூடாது என்பதால், 1892 ஆம் ஆண்டு தீர்மானத்தில் முதன்முதலில்

2022 மார்ச் 21] [திரு. கு. செல்வபெருந்தகை]

சிவசமுத்திரம் அணை கட்டும்பொழுது, முறைப்படி சென்னை மாகாணத்தின் அனுமதியை வாங்கிக் கட்டினார்கள். அதற்குப் பிறகு 1924–லே ஒப்பந்தங்களை மீறி, முதல்முறை விதிமுறைகளை மீறி, அங்கே அணை கட்டுவதற்கு முயற்சி செய்தார்கள்.

அதற்குப் பிறகு 50 ஆண்டுகள் காலாவதியாகிவிட்டன என்று அடம்பிடித்தார்கள். இதையெல்லாம் அப்போதிருந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முறியடித்து, தமிழகத்தினுடைய உரிமைகளை நிலைநாட்டினார்கள். நான் இதை முழுமையாக நம்புகிறேன். தமிழக மக்களும் முழுமையாக நம்புகிறார்கள். இந்த 130 ஆண்டு கால பிரச்சினையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு, பேராண்மையோடு வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை தமிழக மக்களுக்கு இருக்கிறது. ஏனென்றால், அவர் யாருக்கும் அஞ்சப்போவதுமில்லை; யாரிடமும் கெஞ்சப்போவதுமில்லை. சட்டம் நமக்கு ஆதரவாக இருக்கிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நமக்கு ஆதரவாக இருக்கிறது. உண்மையைச் சொல்லியிருக்கிறது. அதேபோன்று காவேரி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பும் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

ஆனால், ஒன்றை மட்டும் ஒன்றிய அரசு புரிந்துகொள்ளவேண்டும். நான் கர்நாடக அரசைப் பார்த்து கேட்கிறேன். சமீப காலத்தில் லடாக் பகுதியிலே, கல்வான் பகுதியிலே எப்படி சீனா அத்துமீறி நம்முடைய பகுதியில் பாலம் கட்டினார்களோ, நம்முடைய ஏரியை அவர்களுடைய அணை என்று சொன்னார்களோ, அதுபோன்று ஒரு. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நாம் காவேரியிலே நின்றுவிடுவோம். அங்கே போனால் ரொம்ப நேரம் ஆகும். காவேரியோடு நின்று விடுவோம்.

முற்பகல் 11–45

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வரலாற்றுப் பிழை ஏற்பட்டுவிடக் கூடாது. ஒன்றிய அரசு, கர்நாடக அரசை அனுமதிக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், காவேரிக்கு மட்டும் என்ன ஆலோசனை சொல்ல முடியுமோ அதனைச் சொல்லுங்கள்.

[*2022 மார்ச் 21*

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே தவறு செய்கிறார்கள்; யார் அனுமதிக்கிறார்கள்; யார் இதற்கு உறுதுணையாகப் போகிறார்கள்; எங்கு அரசியலாக்கப்படுகிறது என்பதை நாட்டு மக்களுக்கு இந்த அவையின் மூலம் நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். சர்வதேச நீதிமன்றத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், காவேரிப் பிரச்சினை குறித்து மட்டும் பேசுங்கள்; கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்து உரையை முடித்துக்கொள்ளுங்கள். அதுகுறித்து discussion பிறகு வைத்துக்கொள்ளலாம்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு இதனைக் கண்டிக்க வேண்டும்; இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏற்கெனவே சர்வதேச நீதிமன்றத்தில் நமக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டன. திபெத் பகுதியிலே, லடாக் பகுதியிலே, வங்காள தேசப் பகுதியிலே, சீனப் பகுதியிலே என்ன சொல்கிறார்கள் என்றால், நம்முடைய நீர்ப்பிடிப்புகளுக்கு எங்கிருந்து நீராதாரம் உருவாகிறதோ, அங்கிருந்து அது கடலில் கலக்கும் வரை நமக்கு உரிமை இருக்கிறது என்று சர்வதேச நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு சொல்கிறது. அதேதான் எங்களுக்கும் பொருந்தும். எங்கிருந்து நீர் உருவாகிறதோ, கடலில் கலக்கும் வரை எங்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை ஒன்றிய அரசு நிலைநாட்ட வேண்டும். நம்முடைய உரிமையைப் பெற்றுத் தர வேண்டும். ஆகவே, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு நாங்கள் ஆதரிக்கிறோம்; வரவேற்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

காவிரி நதி நீர், டெல்டா மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாகவும், தமிழ்நாட்டிலுள்ள இருபதுக்கும் மேற்பட்ட மாவட்டங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும்

2022 மார்ச் 21] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

நீராதாரமாகவும் விளங்குகிறது. சற்று விளக்கமாகத்தான் பேசியாக வேண்டும். வேறு வழியில்லை. நாட்டு மக்களுக்கு இதனைத் தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால் நாட்டு மக்கள் அச்சத்தில் இருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் கர்நாடக அரசு புதிய புதிய தடைகளைப் போட்டுக்கொண்டே இருக்கிறது. நாமும் தடுத்து நிறுத்திக்கொண்டே இருக்கிறோம். ஆகவே, நாம் எடுத்த முடிவுகள் சிலவற்றை மக்கள் அறிந்துகொள்வதற்காக இந்தக் கருத்துகளை அவையில் பதிய வைக்க விரும்புகிறேன்.

1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையிலான தமிழ்நாடு அரசு, 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தாவா சட்டத்தின்படி ஒரு நடுவர் மன்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது. இப்பிரச்சினை தொடர்பாக, தமிழ்நாடு காவேரி நீர்ப்பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசும் தன்னை இவ்வழக்கில் இணைத்துக் கொண்டது. 25–6–1991 அன்று, மேட்டூர் அணைக்கு 205 டி.எம்.சி. அடி நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் காவேரி நடுவர் மன்றம் ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், இந்த இடைக்கால ஆணை நடைமுறையில் இருக்கும் என்று இடைக்கால ஆணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உறுதியான நடவடிக்கையின் காரணமாக 10–12–1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டு, காவேரியில் தமிழ்நாட்டின் உரிமை நிலை நாட்டப்பட்டது. மத்திய அரசிதழில் இந்த இடைக்கால ஆணை வெளியிடப்பட்டாலும், அதனைச் செயல்படுத்துவதற்கான அமைப்பு ஏற்படுத்தப்படாத காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி 1992 ஆம் ஆண்டு ஒரு சிவில் வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. 11–8–1998 அன்று மத்திய அரசு, காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு என்ற இரு அமைப்புகளை ஏற்படுத்தியது. இந்த அமைப்புகளால் தமிழ்நாட்டிற்கு பயன் ஏதும் கிடைக்கவில்லை. இதன்பிறகு, காவேரி நடுவர் மன்றம், தனது இறுதி ஆணையை 5–2–2007 அன்று பிறப்பித்தது. காவேரி நடுவர்

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2022 மார்ச் 21*

மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையினை அன்றைய மத்திய அரசு நிறைவேற்றவில்லை. அம்மா அவர்கள் 2007 ஆம் ஆண்டு நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். உச்ச நீதிமன்றம் 2007–ன் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியது. அதன்படி, மத்திய அரசு, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிட்டு, காவேரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டது.

காவேரி படுகை, ஒரு பற்றாக்குறை படுகை ஆகும். காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி, நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்கி வைக்கவும், அவற்றிலிருந்து நீரை விடுவிப்பதற்கும் தற்போது இயங்கி வரும் அணைகளே போதுமானதாக உள்ளன என காவேரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளது. மேலும் எந்தவொரு திட்டத்தினையும் செயல்படுத்த கொள்கை அளவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் முன்னரே, கீழ்ப்பாசன மாநிலங்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்கவில்லை.

முற்பகல் 11–50

எனவே, இந்த இரு அமைப்புகளையும் உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி, மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி, 18–3–2013 அன்று தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

கர்நாடக அரசு, நீர் மின் திட்டங்கள் பற்றி ஏதும் தெரிவிக்காமல், குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில் மேகதாது என்னுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்டக் கோரியுள்ள தொழில்நுட்ப ஆய்விற்கான விருப்பம் கோரும் அறிவிப்பைத் திரும்பப் பெற வேண்டுமெனவும், காவேரி படுகைப் பகுதியில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு மாறாக கர்நாடகம் இவ்விரு அணைகளைக் கட்டும்

2022 மார்ச் 21] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

பணிகளையோ அல்லது வேறு எந்தப் புதிய திட்டங்களையோ மேற்கொள்ளக்கூடாது எனவும், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையிலும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவுக்கு வரும் வரையிலும் தற்போதைய நிலையே தொடர வேண்டும் என்றும் ஆணை வழங்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு *18–11–2014* அன்று உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

கர்நாடக அரசு அதன் *18–11–2014* நாளிட்ட கடிதத்தில், ஏற்கெனவே நிலுவையில் உள்ள இடைக்கால மனுவில், உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்காமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை என்று தமிழ்நாடு அரசுக்கு அன்றைய தினம் தெரிவித்துள்ளது.

கர்நாடக அரசு, தன்னிச்சையாக மேற்கொள்ளும் மேற்கண்ட திட்டங்களைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் *5–12–2014* அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதத்தை, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த *55* நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை *28–3–2015* அன்று நேரில் சந்தித்து கடிதத்தை வழங்கினார்கள்.

அப்போது, சம்பந்தப்பட்ட துறையிடம் தற்போதைய நிலை குறித்த அனைத்து விவரங்களையும் சேகரிக்க ஏற்கெனவே அறிவுறுத்தியுள்ளதாகவும், இது குறித்து பரிசீலிப்பதாகவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் *25–4–2015* அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, மேகதாது திட்டத்தினை கர்நாடக அரசு செயல்படுத்தக் கூடாது என கர்நாடக அரசுக்கு அறிவுறுத்தும்படி கோரி விளக்கமான கடிதத்தையும் அளித்தார்.

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2022 மார்ச் 21

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் 7–8–2015 மற்றும் 14–6–2016 ஆகிய நாட்களில் நேரில் சந்தித்து மேகதாது அணை திட்டத்தினை கர்நாடக அரசு செயல்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மேகதாது அணை உட்பட காவேரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் வகையிலும், தமிழ்நாடு அரசின் இசைவு பெறாமலும், எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்த உத்தேசிக்குமானால், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட சட்டப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என 18–8–2016 அன்று இம்மாமன்றத்தில் விதி 110–ன்கீழ் அளித்த அறிக்கையில் உறுதிபடத் தெரிவித்தார்கள்.

இதற்கிடையில் மாநில அரசுகள் தாக்கல் செய்த சிவில் வழக்குகள் விசாரணைக்கு உகந்ததா என்பது பற்றி உச்ச நீதிமன்றத்தில் எல்லா மாநிலங்களும், மத்திய அரசும் வாதிட்டன. 9–12–2016 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த ஆணையில், இம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் விசாரணைக்கு உகந்தவை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அதன் பின்னர், ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை இறுதிக் கட்ட வாதங்கள் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றன. இதில், கர்நாடக அரசு 9 நாட்களும், கேரள அரசு 2 நாட்களும், தமிழ்நாடு அரசு 13 நாட்களும், புதுச்சேரி மற்றும் மத்திய அரசு தலா ஒரு நாளும் தங்கள் வாதங்களை நீதிமன்றத்தில் எடுத்துரைத்தன.

அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த உச்ச நீதிமன்றம், 16–2–2018 அன்று தனது தீர்ப்பினை வழங்கியது. இத்தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

பன்மாநில நதிகள் தேசிய சொத்து. எந்த ஒரு மாநிலமும் தனி உரிமை கோர இயலாது என்ற நவம்பர், 1991 ஆம் ஆண்டைய உச்ச நீதிமன்றத்தின் கருத்து இத்தீர்ப்பில் மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

1892 மற்றும் 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்கள் செல்லத்தக்கவையல்ல என்ற கர்நாடகாவின் வாதம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

2022 மார்ச் 21] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

கர்நாடக அரசு, தமிழ்நாட்டின் பாசன பரப்பான 24.708 இலட்சம் ஏக்கர் என்பதை 21 இலட்சம் ஏக்கர் எனக் குறைக்க வேண்டுமென நடுவர் மன்றத்தின்முன் வாதிட்டது. இதனை காவேரி நடுவர் மன்றம் ஏற்றுக்கொள்ளாமல் தமிழ்நாட்டின் பாசனப் பரப்பு 24.708 இலட்சம் ஏக்கர் என அதன் இறுதித் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. இதனை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

உச்ச நீதிமன்றம் தற்போது பிறப்பித்த ஆணைக்கு பாதகம் ஏதும் இல்லாமல், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணைப்படி, மாதாந்திர அடிப்படையில் 15 ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டிற்கு நீர் வழங்கப்பட வேண்டும் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம் அனைத்து மாநிலங்களின் வாதங்களை முழுமையாகக் கேட்டறிந்த பின்னர், கீழ்படுகை மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் மேல்படுகை மாநிலங்கள் எவ்விதக் கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது எனத் தெளிவாக ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது.

மேகதாது அணை திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்ற நமது நிலைப்பாட்டை, உச்ச நீதின்றத் தீர்ப்புக்கு முன்னரும், பின்னரும், 25–2–2017, 27–2–2017, 4–9–2018, 8–10–2018 மற்றும் 22–11–2018 ஆகிய நாட்களில் நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதங்கள் மூலமாகவும், நேரடியாகச் சந்தித்தும், அணை கட்டுவதற்கான அனுமதியை மத்திய அரசு வழங்கக் கூடாது எனத் தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

முற்பகல் 11–55

மேலும், அரசால் 5–7–2017 மற்றும் 23–11–2017 ஆகிய நாட்களில் மாண்புமிகு மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தும், கடிதங்கள் வாயிலாகவும், கர்நாடக அரசுக்கு எவ்வித அனுமதியையும் மத்திய அரசு வழங்கக் கூடாதென வலியுறுத்தப்பட்டன.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டினை பல முறை எடுத்துரைத்தும் கர்நாடக அரசு, அதைக் கருத்தில்கொள்ளாமல், ஒருதலைப்பட்சமாக செயல்படுவது

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2022 மார்ச் 21

வேதனையளிப்பதாக உள்ளது. இது காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையையும் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மீறும் செயலாகும்.

ஏற்கெனவே, உச்ச நீதிமன்றம், பெங்களூரு நகரின் குடிநீர்த் தேவை உள்ளிட்ட பிற பயன்பாடுகளுக்காக 14.75 TMC அடி நீரை கர்நாடகாவிற்கு கூடுதலாக அளித்து உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் கர்நாடக அரசு, மீண்டும் பெங்களூருவின் குடிநீர்த் தேவைக்கென 67 TMC அடி நீர் கொள்ளளவு கொண்ட மேகதாது அணையைக் கட்ட முயற்சிப்பது, தமிழ்நாட்டைப் பாலைவனமாக்கும் உள்நோக்கம் கொண்ட ஒரு செயலாகும். எனவே, இவ்வணை கட்டப்பட்டால், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரமும், உரிமையும் கடுமையாக பாதிக்கப்படும். மேலும், குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படும் ஆண்டுகளில், கடந்த காலங்களைப் போலவே காவேரி நீரை முழுமையாக தனது உபயோகத்திற்காகவே கர்நாடக அரசு பயன்படுத்திக்கொள்ளும் நிலை உருவாகும். மேலும், சட்ட வல்லுநரின் ஆலோசனையின்படி, கர்நாடகத்திற்கு வழங்கியுள்ள அனுமதியை நிறுத்திவைத்து, உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென தமிழ்நாடு அரசின் சார்பில் 30–11–2018 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதைத் தவிர, காவேரி படுகையில் மேற்படுகை மாநிலமான, கர்நாடகாவிற்கு புதிய அணை கட்டுவதற்கான எந்த ஒரு அனுமதியையும் மத்திய அரசு வழங்கக் கூடாது என்று உறுதிபட எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், உச்ச நீதிமன்ற ஆணைக்கு எதிராக, கர்நாடக அரசின் மேகதாது அணை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி வழங்கிய மத்திய நீர்வளக் குழுமத்தின் தலைவர், கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் கர்நாடக உயர் அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (Contempt of Court) அம்மாவின் அரசால் 5–12–2018 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"நிலத்தில் பாயும் நீரானது பொதுவானது மற்றும் அனைவருக்கும் சமமானது. அதை யாரும் தடுக்கவோ அல்லது நீரைத் திருப்பவோ முடியாது. ஆற்று நீர் என்பது இயற்கையின் பரிசாகும்" என்று மாண்புமிகு உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே, மேகதாதுவில் அணைகட்டும்

2022 மார்ச் 21] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

கர்நாடக அரசின் முயற்சிகளைத் தடுக்கும் வகையில் தமிழக சட்டமன்றத்தில், இரண்டுமுறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசால் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

2014 ஆம் ஆண்டில் கர்நாடக அரசு குடிநீர்த் திட்டம் என்ற போர்வையில் மேகதாது என்னுமிடத்தில் புதிதாக இரண்டு அணைகள் கட்ட உள்ளதாகவும், இதற்கென தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்வதற்காக "விருப்பம் கோரும் அறிவிப்பை" கோரியுள்ளது என்று செய்திகள் வந்ததையடுத்து, கர்நாடக அரசு தன்னிச்சையாக மேற்கொள்ளும் மேற்கண்ட திட்டங்களைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு 5–12–2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மீண்டும் மேகதாதுவில் புதிய அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மத்திய நீர்வளக் குழுமம் கர்நாடக அரசுக்கு அளித்துள்ள அனுமதியைத் திரும்பப் பெறக்கோரி மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 6–12–2018 அன்று அம்மா அரசின் அப்போதைய முதல்வராக இருந்த நான் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, அது 1986 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவக்கப்பட்ட சட்டப் போராட்டத்தைத் தொடர்ந்து, காவேரி நடுவர் மன்றம் அமைத்தது, அதை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்தது, நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர்முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க உச்ச நீதிமன்றத்தை நாடியது, உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பைப் பெற்றது, அதன் பின்னர் காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்க முனைப்புடன் பாடுபட்டது. நீண்ட நெடுங்கால சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் நிலைநிறுத்தப்பட்ட தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமையையும், டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், 20 மாவட்டங்களுக்கும் மேலாக குடிநீர் ஆதாரமாக விளங்கும் காவேரி ஆற்றில் நமக்குள்ள உரிமையையும் பேணிக் காக்க வேண்டியது நம் எல்லோரின் கடமையாகும்.

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2022 மார்ச் 21*

கர்நாடக அரசு காவேரி நடுவர் மன்றம் அளித்த இறுதித் தீர்ப்பை மதிக்காமலும், 16–2–2018 அன்று உச்ச நீதிமன்றம் அளித்த இறுதித் தீர்ப்பையும் மதிக்காமலும், தன்னிச்சையாக மேகதாதுவில் அணை கட்ட நிதி ஒதுக்கியது கண்டிக்கத்தக்கது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன்.

மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள் ஆதங்கத்தோடு பேசினார். என்னுடைய ஆதங்கத்தையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். யாரையும் குறை சொல்லிப் பேசவில்லை. நமக்குக் கிடைத்த வாய்ப்பு. அது திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு. கிட்டத்தட்ட 1999 ஆம் ஆண்டில் பாரதிய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சிக்கு வந்தது. அதிலும் நீங்கள் அங்கம் வகித்தீர்கள். அதற்குப் பின்னர் (குறுக்கீடு) இல்லை, நான் என் ஆதங்கத்தைத்தான் சொல்கிறேன், யாரையும் குறை சொல்லவில்லை. குறை சொல்லவில்லை.

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் படித்தது. . .* (குறுக்கீடு) *சொல்லிவிடுகிறேன், ஒரு நிமிடம். நீங்கள் படித்தது மிகவும் அருமையாக இருந்தது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்தது கிடையாது, நடந்ததைச் சொன்னேன். படித்தது கிடையாது. நடந்த வரலாற்றைத்தான் சொல்லியிருக்கிறேன். ஓர் ஆட்சி மாறி அடுத்த ஆட்சி வருகின்றபோது தொடர்ந்து செயல்பட வேண்டும். ஆகவே, ஆட்சி மாறி, மாறி வந்தாலும் தமிழ்நாட்டு மக்களுடைய நலன் கருதி, உங்களுடைய ஆட்சியிலும் நீங்கள் நடவடிக்கை எடுத்தீர்கள், எங்களுடைய ஆட்சியிலும் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அவற்றையெல்லாம் நான் குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய ஆதங்கம் என்னவென்றால், மத்தியில் 10 ஆண்டுக்காலம் உங்களுடைய கூட்டணிக் கட்சியுடன் ஆட்சியில் இருந்தீர்கள். அண்ணன் அவர்கள் "மத்தியில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நமக்கு செய்யப் போவது இல்லை, காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நமக்கு செய்யப் போவது இல்லை" என்று சொன்னார்கள். இரண்டு மத்திய அமைச்சர்கள் அமைச்சரவையில் அங்கம் வகித்தீர்கள். அப்போது உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி காவேரி ஆற்றினுடைய*

2022 மார்ச் 21] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

பிரச்சினையில் நிரந்தரமாகத் தீர்வு காணவில்லை என்பதுதான் என்னுடைய ஆதங்கம். வேறொன்றுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல காவேரி நதிநீர் பிரச்சினைக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 20 நாட்கள் நாடாளுமன்றமே முடங்குகின்ற அளவிற்கு அவர்களுடைய வாதத்தை எடுத்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுக்காக, டெல்டா மாவட்ட விவசாய பெருமக்களுக்காக குரல் கொடுத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக ஒருமனதாக ஆதரிக்கிறோம் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையாக.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பதிலுரையாக அல்ல, கனத்த இதயத்தோடு நான் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். ஆனால், வெந்துபோன இதயத்தோடு இப்பொழுது நான் உங்கள் முன்னால் நிற்கிறேன். நான் அப்பொழுதே சொன்னேன், அவர்கள் ஆட்சியில் இருந்தபோது அவர்கள் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். யார், யார் என்ன செய்தார்கள் என்பதை வேகமாகச் சொன்னேன். நாங்கள் இருக்கும்போது செய்தோம் என்று சொன்னோம். ஆனால், இவற்றையெல்லாம் நமக்குள்ளே பேசிக்கொண்டிருக்க வேண்டாம், மறந்துவிட்டு இன்றைக்கு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுங்கள் என்றுதான் சொன்னேன். ஆனால், என் பெருமதிப்பிற்குரியவர் நம்முடைய திரு. எடப்பாடியார் அவர்கள், முன்னாள் முதல்வர், இதே பொதுப் பணித் துறையில் பதவி வகித்தவர், அதற்கு மாறாக அவர்கள் ஆட்சியிலே செய்த கதைகளையெல்லாம் இப்பொழுது சொன்னார், சொல்லித்தான் ஆக வேண்டும். இதை சொல்ல வேண்டாம் என்றுதான் நான் சொன்னேன். ஆனால், நான் இதே மாதிரி (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். இதே மாதிரி நான் சொல்ல முடியும் என்பது அவருக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால், இந்த காவேரி பிரச்சினையில் எழுத்துக்கு எழுத்து நான் கூட இருந்தவன். எனவே, எனக்கு அது full ஆகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)– ஆனால், அவ்வளவையும் அடக்கிக்கொண்டு–ஒரு காலத்திலே,

[திரு. துரைமுருகன்] [2022 மார்ச் 21

சில நேரங்களிலே ஒருவரையொருவர் தாக்கியிருந்தால், நானே தாக்கியிருந்தால்கூட அதற்கு நான் வருத்தப்படுகிறேன் என்று சொல்லி, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்று சொன்னேன். ஆனால், அவற்றையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, நம்முடைய திரு. எடப்பாடியார் அவர்கள் ஒரு பெரிய சுயபுராணத்தைப் பாடினார். இதே சுயபுராணத்தை என்னாலும் பாட முடியும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். கேட்டுக்கொள்ளலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானத்தை ஏகமனதாக ஆதரிக்கிறோம் என்று சொல்லிவிட்டோம். ஆனால், இன்றைக்கு நாட்டு மக்கள் அச்சத்தில் இருக்கின்றார்கள். குறிப்பாக, டெல்டா பாசன விவசாயிகள் மிகப் பெரிய அச்சத்தில் இருக்கின்றார்கள். ஏனென்றால், கர்நாடகா அரசு அணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதையெல்லாம் விளக்கமாகப் பேசியாக வேண்டும். மக்களுக்குத் தெரிய வேண்டும். நான் சொன்னதில் எந்தத் தவறும் கிடையாதே! 10 ஆண்டுக்காலம் நீங்கள் மத்திய அரசின் ஆட்சியில் இருந்தீர்களா? இல்லையா? நீங்கள்தானே சொன்னீர்கள். இதற்கு முன்னர் நீங்கள் முன்னுரை ஆற்றுகின்றபோது, பாரதிய ஜனதா கட்சியும் நமக்கு நன்மை செய்யவில்லை; காங்கிரஸ் கட்சியும் நமக்கு நன்மை செய்யவில்லை என்று சொன்னீர்கள். இரண்டு ஆட்சியிலும் பங்குபெற்றது நீங்கள். உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். அதைத்தான் சொன்னேன். ஒன்றும் தவறாக சொல்லவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, போதும். ஒன்றுபட்டு ஒரு முடிவிற்கு வாருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அவர்கள் எங்களுடைய கட்சியைக் குறை சொன்னாலும் சரி; என்னைச் சொன்னாலும் சரி; என் தலைவரைச் சொன்னாலும் சரி; அல்லது வேறு யாரைச் சொன்னாலும் சரி, நான் இப்போது கவலைப்பட மாட்டேன். நான் இப்போது வாள் எடுக்கத் தயாராக இல்லை. என்னுடைய

2022 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

தீர்மானம் கண்ணியமாக நிறைவேற்றப்பட்டது என்ற செய்திதான் வெளிவர வேண்டும் என்று கருதுகிறேன். அதை திசை திருப்ப வேண்டுமென்று செய்கின்ற சில சில்மிஷங்களுக்கு நான் இடம் கொடுக்க மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், மேகதாது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தை, அரசினர் தனித் தீர்மானமாகக் கொண்டுவந்து, அவரே முன்னுரையாக வரலாற்றிலே பதிவாகியிருக்கக்கூடிய பல்வேறு செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, கட்சி பேதமின்றி, அரசியல் பேதமின்றி, இந்தத் தீர்மானத்தை நாம் ஒருமனதாக நிறைவேற்றிட வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேயே முன்மொழிந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்ததற்குப் பிறகு, அதைத் தொடர்ந்து உரையாற்றிருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்று, இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றிட, இந்த அரசிற்கு ஆதரவு தந்தமைக்கு முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

மேகதாது அணையை கர்நாடகம் கட்டுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி தருவதை நிச்சயம் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒத்துக்கொள்ள மாட்டோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நடுவர் மன்றத் தீர்ப்பிற்கும், உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இறுதித் தீர்ப்பிற்கும் எதிராக கர்நாடக அரசு மேற்கொள்ளத் துடிக்கும் இந்த முயற்சியை தமிழ்நாடு அரசு நிச்சயம் தடுக்கும். அணைக்கு அனுமதியளிக்கக்கூடாதென ஒன்றிய அரசிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதிலும், சட்ட ரீதியான நடவடிக்கைகளிலும் இந்த அரசு நிச்சயமாக உறுதியாக இருக்கும். அதிலே எந்தவித பாகுபாடும் பார்க்க மாட்டோம். அணை கட்டக்கூடிய முயற்சிகளை எல்லா

[திரு. மு.க. ஸ்டாலின்] [2022 மார்ச் 21

வடிவிலும் இந்த அரசு எதிர்க்கும். தமிழ்நாட்டின் காவேரி உரிமையை, தமிழ்நாட்டின் உழவர்களின் நலனை இந்த அரசு நிச்சயம் பாதுகாக்கும். தமிழ்நாட்டு உரிமையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்; நிச்சயம் வெற்றி பெறுவோம். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை அனைத்துக் கட்சியினரும் வரவேற்று, பேசியிருக்கின்றார்கள். குறிப்பாக நடந்ததை பல பேர் பதிவு செய்தாலும், நடப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் துணையாக நிற்போம் என்று ஏகமனதாக சொன்ன அனைத்துக் கட்சியினருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போர் இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

7. வரவு–செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022–2023, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீதான பொது விவாதம். இன்று 8 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. எட்டு உறுப்பினர்களும் இரண்டு நிதிநிலை அறிக்கைகள்மீதும் சேர்த்தே விவாதிக்கலாம். முதலாவதாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசவிருக்கின்றார்கள். முதலில் பேசும் இருவருக்கு தலா 15 நிமிடங்களும், அதன்பின் பேச வருகின்ற 6 உறுப்பினர்களுக்கு தலா 10 நிமிடங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அனைத்திந்திய அண்ணா